செ.வெ.எண்: 49/பிப்ரவரி நாள்: 24.02.2016

## இராமநாதபுரம் மாவட்டம்

## செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பாக அமைக்கப்பட்டிருந்த தமிழ்நாடு அரசின் சாதனை விளக்க புகைப்படக் கண்காட்சியினை

## மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர்நலன் துறை அமைச்சர் டாக்டர்.எஸ்.சுந்தரராஜ் அவர்கள் துவக்கி வைத்து பார்வையிட்டார்.

இராமநாதபுரம் மாவட்டம், இராமநாதபுரம் புதிய பேருந்து நிலைய வளாகம் அருகில் இன்று (24.02.2016) செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பாக அமைக்கப்பட்டிருந்த தமிழ்நாடு அரசின் சாதனை விளக்க புகைப்படக் கண்காட்சியினை மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர்நலன் துறை அமைச்சர் டாக்டர்.எஸ்.சுந்தரராஜ் அவர்கள் துவக்கி வைத்து பார்வையிட்டார். மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமை வகித்தார்.

செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பாக இப்புகைப்படக் கண்காட்சி 24.02.2016 மற்றும் 25.02.2016 ஆகிய இரு தினங்களுக்கு பொதுமக்களின் பார்வைக்காக அமைக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு அரசின் மூலம் கடந்த ஐந்து ஆண்டுகளில் நிறைவேற்றப்பட்டுள்ள சாதனைகள், பொதுமக்களுக்கு வழங்கப்பட்டுள்ள நலத்திட்டங்கள் குறித்த விவரங்களை பொதுமக்கள் எளிதில் அறிந்து கொள்ளும் விதமாக இப்புகைப்படக் கண்காட்சி அமைக்கப்பட்டிருந்தது. இப்புகைப்படக் கண்காட்சி அரங்கில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்கள் நாட்டின் வளர்ச்சிக்காக பாடுபட்ட தேசிய தலைவர்கள் உடனிருந்த அரிய புகைப்படங்கள், அரசு விழாக்களில் கலந்து கொண்டு பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கிய புகைப்படங்கள் , பல்வேறு மேம்பாட்டு திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டி துவக்கி வைத்த விழாக்களின் புகைப்படங்கள் மற்றும் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் கலந்து கொண்ட அரசு விழாக்களின் புகைப்படங்கள் பொதுமக்கள் பார்வைக்காக வைக்கப்பட்டிருந்தன. இப்புகைப்படக் கண்காட்சியினைப் பார்வையிட்ட பொதுமக்கள் தமிழக அரசின் நலத்திட்டங்கள் குறித்து அறிந்து கொள்ள இப்புகைப்படக் கண்காட்சி பயனுள்ளதாக அமைந்தது என தெரிவித்தனர்.

தொடர்ந்து மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர்நலன் துறை அமைச்சர் டாக்டர்.எஸ்.சுந்தரராஜ் அவர்கள், மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் ஆகியோர், செய்தி மக்கள் தொடர்புத் துறையின் கீழ் இயங்கி வரும் நவீன மின்னணு திரை கொண்ட விளம்பர வாகனத்தின் மூலம் திரையிடப்பட்ட தமிழ்நாடு அரசின் சாதனை விளக்க விளம்பர படக்காட்சியினைப் பார்வையிட்டார்கள்.

இந்நிகழ்ச்சியில் செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு.ப.காந்தி, இராமநாதபுரம் நகர்மன்றத் தலைவர் திருமதி.சந்தான லெட்சுமி, முதுகுளத்தூர் கூட்டுறவு நிலவள வங்கித் தலைவர் திரு.இரா.தர்மர், மத்திய கூட்டுறவு வங்கித் தலைவர் திரு.ஜெயஜோதி, இராமநாதபுரம் ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர் திருமதி.சாந்தி சாத்தையா, இராமநாதபுரம் நகராட்சி ஆணையாளர் திரு.சிராஜுதின், உதவி மக்கள் தொடர்பு அலுவலர் (செய்தி) திரு.ம.கயிலைச்செல்வம், நகர்மன்ற உறுப்பினர் திரு.குமார், ஊராட்சி ஒன்றியக் குழு உறுப்பினர்கள் திரு.ஜி.முனியசாமி, திரு.அசோக் உட்பட அரசு அலுவலர்கள்,உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**
**புகைப்படம் : மின்னஞ்சலில் அனுப்பப்பட்டுள்ளது.**